**கனம் சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை: திருமதி. R. கீதா, B.A.,B.L.,**
**சார்பு நீதிபதி, மானாமதுரை.**
**2024ம் வருடம் ஏப்ரல் மாதம் 4ம் நாள் வியாழக்கிழமை**
**I.A.No.2/2023**
**In**
**O.S.No.17/2023**

மாதவன் ...மனுதார்/ உத்தேசிக்கப்பட்ட 2ம் வாதி

முத்தம்மாள் ...1ம் வாதி

/எதிர்/

1. பொன்னழகு
2. ராமசாமி
3. இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும்
   நோய்தடுப்பு மருத்துவமனை, சென்னை - 6
4. சார்பதிவாளர்
   மானாமதுரை ...1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 4 பிரதிவாதிகள்
5. மகேஸ்வரன்
6. மகாராஜன் ...உத்தேசிக்கப்பட்ட 5, 6 எதிர்மனுதார்கள்/ உத்தேசிக்கப்பட்ட 5, 6 பிரதிவாதிகள்

இம்மனுவானது, இறுதி விசாரணைக்காக 19.03.2024ம் தேதி என் முன்னர் வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. S. இளங்கோவன், பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 1, 5, 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. T. முத்துசாமி, பி.ஏ.,பி.எல்., 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்டும், சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று (04.04.2024) இந்நீதிமன்றம் வழங்கலான:-

**உத்திரவு**

இம்மனுவானது, அசல் வழக்கில் மனுதாரரை 2ம் வாதியாகவும், 5, 6 எதிர்மனுதாரர்களை 5, 6 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கு நடத்த உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்/உத்தேசிக்கப்பட்ட 2ம் வாதி தரப்பிலான மனு அபிடவிட்டின் சுருக்கம்:**

மனுதாரர் தனது மனுவில், இந்த நிர் வழக்கு சொத்து மனுதாருக்கு பூர்வீக பாத்தியமான சொத்து என்றும், மனுதாரது தகப்பனார் 03.12.2008ல் 3ம் பிரதிவாதியான இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவமனை சென்னை-6 என்ற முகவரியில் உள்ள இயக்குநருக்கு நன்கொடை பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றும், மேற்படி விவரம் மனுதாருக்கு வாதி வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் தெரியவந்ததாகவும், மனுதாரது தகப்பனார் மனுதாருக்கு சேர வேண்டிய பங்கையும் சேர்த்து கிரையம் கொடுக்க மனுதாரது தகப்பனாருக்கு உரிமையில்லை என்றும், மனுதாரது தகப்பனாருக்கு உரிய பங்கை மட்டுமே கிரையம் கொடுக்க உரிமை உடையவர் என்றும், வழக்குசொத்தில் மனுதாராது தகப்பனாருக்கு கிடைக்கக்கூடிய 1 பங்கில் 4ல் 1 பங்கு மனுதாருக்கு கிடைக்கக்கூடியது என்றும், இந்த நிர் 4, 5 எதிர்மனுதார்கள் மனுதாரது உடன்பிறந்த சகோதரர்கள் என்றும், அவர்களையும் இந்த நிர் வழக்கில் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு நடத்த வேண்டும் என்றும், அதனால் மனுதாருக்கு கிடைக்கக்கூடிய பங்கை நீதிமன்றத்தின் மூலம் பெற இந்த நிர் வழக்கில் மனுதாரை 2ம் வாதியாக சேர்த்து வழக்கு நடத்த அனுமதி வழங்க வேண்டும் என்றும், ஆகையால் இந்த நிர் வழக்கில் மனுதாரை 2ம் வாதியாகவும், 5, 6 எதிர்மனுதார்களை 5, 6 பிரதிவாதிகளாகவும் சேர்த்து வழக்கு நடத்த உத்தரவிட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**3) 4 எதிர்மனுதார்/பிரதிவாதி தரப்பிலான எதிர்உரையின் சுருக்கம்: (4ம் எதிர்மனுதார்/பிரதிவாதி தரப்பு எதிருரையை 3ம் எதிர்மனுதார்/பிரதிவாதி தனது தரப்பு எதிருரையாக ஏற்றுக்கொள்வதாக மேற்கோள் செய்யப்பட்டது)**

4ம் எதிர்மனுதார் தனது எதிர்உரையில், மனுதாரர்/உத்தேசிக்கப்பட்ட 2ம் வாதி மற்றும் 5, 6 எதிர்மனுதாரர்/உத்தேசிக்கப்பட்ட 5, 6 பிரதிவாதிகள் ஆகியோர்

1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் வாரிசு என்றும், ஆகையால் தாவா சொத்து 1ம் வாதியின் தந்தை மற்றும் மனுதாரரின் தந்தையான 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மற்றும் 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு பூர்வீக பாத்தியமான சொத்து என்றும், பொதுவில் வைத்து அனுபவம் செய்து வந்ததாகவும், அதில் மனுதாரர்/உத்தேசிக்கப்பட்ட 2ம் வாதி கிடைக்க வேண்டிய 4ல் 1 பங்கு மதிப்புள்ள சொத்தை மனுதாரரின் தந்தையான 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி கிடைக்க வேண்டியது என்றும், அந்த பங்குகளுக்கு இந்த மனுதாரர்/உத்தேசிக்கப்பட்ட 2ம் வாதி மற்றும் 5, 6 எதிர்மனுதாரர்/உத்தேசிக்கப்பட்ட 5, 6ம் பிரதிவாதி முழு வாரிசுதாரர்கள் என்றும், இவற்றில் 1ம் வாதியின் தகப்பனார் மனுதாரர்/உத்தேசிக்கப்பட்ட 2ம் வாதி தகப்பனார் மற்றும் 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி 1ம் வாதி மற்றும் மனுதாரர்/உத்தேசிக்கப்பட்ட 2ம் வாதிக்கு தெரியாமல் மனுதாரர்/உத்தேசிக்கப்பட்ட 2ம் வாதி மற்றும் 5, 6 எதிர்மனுதாரர்/உத்தேசிக்கப்பட்ட பிரதிவாதிக்கு சேரவேண்டிய பங்கையும் சேர்த்து மோசடியாக நன்கொடை பத்திரம் எழுதி கொடுத்ததாகவும், தாவா சொத்தில் மனுதாரர்/உத்தேசிக்கப்பட்ட 2ம் வாதிக்கு சட்டப்படியான பங்கு கிடைக்ககூடியதாகவும், 1ம் வாதியின் தகப்பனார் பெயரில் இன்றுவரை வருவாய்துறை ஆவணங்களில் இருந்து வருவதாகவும், அதனால் மேலும் தாவா சொத்தில் ஏற்படுத்தியுள்ள 03.12.2008 பதிவு செய்துள்ள நன்கொடை பத்திரம் செல்லா நிலை என அறிவிக்க கோருவதுடன் அந்நிர் வழக்கில் மனுதாரரை 2ம் வாதியாகவும், 5, 6ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளாகவும் சேர்த்து வழக்கு நடத்திட உத்திரவாக வேண்டி மனுதாக்கல் செய்திருப்பது 3, 4ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கப்படுவதாகவும், மனுவில் தெரிவித்துள்ள தாவா சொத்து சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், வேதியரேந்தல் கிராமத்திற்கு உட்பட்ட பட்டா எண் 124, சர்வே எண். 178/1C2, விஸ்தீரணம் 0.88.50 ஹெக்டேர்ஸ் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் 4ம் எதிர்மனுதாரர் தனது எதிருரையில், தாவா சொத்து வேதியரேந்தல் கிராமத்திற்கு பொது ஆரம்ப சுகாதாரம் நிலையம் அமைப்பதற்கு போதிய இடவசதி இல்லாததால் கிராமத்து மக்கள் வேண்டுகோளின்படி மேற்படி கிராமத்தை சேர்ந்த கார்மேகம் மகன் பாஸ்கரன், சுப்பையா மகன் மாயழகு, பெரியகருப்பன்

மகன் கிருஷ்ணன் (1ம் வாதியின் தகப்பனார்), கிருஷ்ணன் மகன் பொன்னழகு (மனுதாரரின் தகப்பனார் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி) கிருஷ்ணன் மகன் ராமசாமி (1ம் வாதியின் சகோதரர்) ஆகியோர்கள் சேர்ந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்காக எழுதிகொடுக்கும் தாவா சொத்துக்களில் 4ம் எதிர்மனுதாருக்கோ அவரது வாரிசுகளுக்கோ எக்காலத்திலும் எவ்விதத்திலும் எவ்வித பாத்தியமும் சம்மந்தமும் பின்துயர்ச்சி கிடையாது என்றும், அப்படி 3, 4ம் எதிர்மனுதார்களோ அவர்களது வாரிசுகளோ துயர்ந்தால் அது சட்டப்படி செல்லதக்கதல்ல என மேற்படி ஐந்து நபர்களும் முழு சம்மதத்துடன் நன்கொடை பத்திரம் எழுதிகொடுக்கப்பட்டதன் அடிப்படையில் தாவா சொத்து மேற்படி மருத்துவதுறைக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதே போல் 24.11.2011 வருடமும் மேற்படி தாவா சொத்தில் பத்திரம் பதிவு எண் 5465/2011 என்ற நன்கொடை பத்திரத்தில் மேற்படி மருத்துவ துறைக்கு அதே கிராமத்தை சேர்ந்த முத்தையா மகன் பழனிச்சாமி, புலையக் கோனார் மகன் செல்லம் மற்றும் குருசாமி, மலைச்சாமி மனைவி பாண்டியம்மாள், சுப்பையா மகன் மாயழகு, கார்மேகம் மகன் பாஸ்கரன், நரசிங்கம் மகன் கருப்பையா, கருப்பையா மகன் சுப்பிரமணியன், முத்தையா மகன் பிச்சை மற்றும் தொத்தன் மகன் நாகராஜ் ஆகியோரும் சர்வே எண் 178/1C2 புன்செய் 0.88.5 ஏர்ஸ்க்கு ஏக்கர் 2, செண்டு 19 உள்ளடங்கிய சொத்துக்கள் மேற்படி நபர்களால் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக எழுதிகொடுக்கும் தாவா சொத்துக்களில் 4ம் எதிர்மனுதாருக்கோ அவரது வாரிசுகளுக்கோ எக்காலத்திலும் எவ்விதத்திலும் எவ்வித பாத்தியமும் சம்மந்தமும் பின்துயர்ச்சி கிடையாது என்றும், அப்படி 3, 4ம் எதிர்மனுதார்களோ அவர்களது வாரிசுகளோ துயர்ந்தால் அது சட்டப்படி செல்லதக்கதல்ல என மேற்படி ஒன்பது நபர்களும் முழு சம்மதத்துடன் நன்கொடை பத்திரம் எழுதிகொடுக்கப்பட்டதன் அடிப்படையில் தாவா சொத்து மேற்படி மருத்துவதுறைக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், தற்போது தாவா சொத்தில் ஆரம்ப சுகாதாரம் நிலையம் அமைப்பதற்கான வேலைப்பாடு நடைபெற்று வருவதாகவும், அதை தடைசெய்யும் நோக்கத்துடன் மூன்றாம் நபர்களின் தூண்டுதலின் பேரில் மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி மனு நிலைக்கதக்கதல்ல என்றும், 3, 4ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சட்டப்படி தான் செயல்படுவாரே தவிர எந்தவிதமான விதிமீறலோ அல்லது ஒருதலைபட்சமாகவோ செயல்படமாட்டோம்

என்பதே உண்மை என்றும், தாவா சொத்து சம்மந்தமாக 3ம் பிரதிவாதியின் சார்பாக பணியாற்றும் துணை இயக்குநர் பொது சுகாதாரம் மருத்துவதுறை சிவகங்கை மாவட்டம் மற்றும் மாவட்ட ஆட்சியர் சிவகங்கை ஆகியோர்களை சேர்க்காமல் மனுதாக்கல் செய்திருப்பது செல்லாநிலையது என்றும், மனுதாரர்/2ம் வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு 3, 4ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு கூடுதல் பணிசுமை ஏற்படுத்த கூடியது என்றும், மேலும் கூடுதல் சங்கதிகள் மற்றும் ஆவணங்களை ஏற்படுத்த இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், ஆகையால் பொய்யான தகவலின் அடிப்படையில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை 3, 4ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**4) 5ம் எதிர்மனுதார்/5ம் பிரதிவாதி தரப்பிலான எதிர்உரையின் சுருக்கம்: (5ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையை 6ம் எதிர்மனுதார்/6ம் பிரதிவாதி தனது தரப்பு எதிருரையாக ஏற்றுக்கொள்வதாக மேற்கோள் செய்யப்பட்டுள்ளது)**

5ம் எதிர்மனுதார் தனது எதிருரையில், இந்த நிர் வழக்கு சொத்து 5, 6 எதிர்மனுதார்களுக்கு பூர்வீகப் பாத்தியமான சொத்து என்றும், 5ம் எதிர்மனுதாரது தகப்பனார் 03.12.2008ல் 3ம் பிரதிவாதியான இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவமனை சென்னை-6 என்ற முகவரியில் உள்ள இயக்குநருக்கு நன்கொடை பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளதாகவும், மேற்படி விபரம் 5ம் எதிர்மனுதாருக்கு உத்தேசிக்கப்பட்ட 2ம் வாதி மனுத் தாக்கல் செய்த பிறகு தான் தெரியவந்ததாகவும், 5ம் எதிர்மனுதாரது தகப்பனார் 5, 6 எதிர்மனுதாரர்களுக்கு சேர வேண்டிய பங்கையும் சேர்த்து கிரையம் கொடுக்க 5ம் எதிர்மனுதாரது தகப்பனாருக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், மேற்படி நன்கொடை பத்திரமும் 5, 6 எதிர்மனுதார்கள் பங்கைப் பொறுத்து 5, 6 எதிர்மனுதார்களைக் கட்டுப்படுத்த கூடியதில்லை என்றும், 5ம் எதிர்மனுதாரது தகப்பனாருக்கு 4ல் 1 பங்கு மட்டுமே கிடைக்கக்கூடியதாகவும், மற்ற 3 பங்கும் உத்தேசிக்கப்பட்ட 2ம் மற்றும் உத்தேசிக்கப்பட்ட 5, 6ம் பிரதிவாதிகள்/உத்தேசிக்கப்பட்ட 5, 6 எதிர்மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய சொத்து என்றும், 5, 6 எதிர்மனுதார்களையும் இந்த நிர் வழக்கில் சேர்த்து 5, 6 எதிர்மனுதார்களது தரப்பு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி வழங்க வேண்டும் என்றும், மனுதார்/உத்தேசிக்கப்பட்ட 2ம் வாதி தாக்கல் செய்துள்ள மனுவை,

உத்தேசிக்கப்பட்ட 5, 6ம் எதிர்மனுதார்கள்/உத்தேசிக்கப்பட்ட 5, 6ம் பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்வதாகவும், ஆகையால் மனுதார்/உத்தேசிக்கப்பட்ட 2ம் வாதி தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதித்தும், உத்தேசிக்கப்பட்ட 5, 6ம் எதிர்மனுதார்கள்/உத்தேசிக்கப்பட்ட 5, 6ம் பிரதிவாதிகளை இந்த வழக்கில் சேர்த்து 5, 6ம் எதிர்மனுதார்களது தரப்பு எதிர்வாதத்தை எடுத்துரைக்க அனுமதி வழங்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**5)** மனுதாரர்கள்/வாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை.

**6)** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**7)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:

**கேள்வி:**

1. இம்மனுவில் கண்டுள்ள மனுதாரர்/ 5, 6 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் அவசிய தரப்பினராக சேர்க்க உத்தரவிடலாமா?

2. இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**8)** வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில், தாவா சொத்து அசல் வழக்கின் வாதி முத்தம்மாள் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் தந்தை கிருஷ்ணன் பூர்வீகப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், தாவா சொத்துக்களில் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளும் கூட்டு பங்குரிமையாளர்கள் என்றும், தாவா சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகம் உள்ளது என்றும், தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதியின் பாக உரிமையை பாதிக்கும் வகையில் தாவா சொத்துக்களைப் பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் மற்றும் அவர்கள் தந்தை கிருஷ்ணன் 3ம் பிரதிவாதிக்கு 03.12.2008ம் தேதிய நன்கொடை ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளதாகவும், எனவே தாவா சொத்தில் வாதிக்குரிய 1/3 பங்கை 1, 2 பிரதிவாதிகள் பாகம் பிரித்து தர வேண்டும் என பாகப்பிரிவினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை வேண்டியும், 3ம் பிரதிவாதி பெயரிலான 03.12.2008 நன்கொடை ஆவணம் இல்லாநிலையது என விளம்புகை பரிகாரம் வேண்டியும் வாதி தரப்பில் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாதி தாக்கல் செய்த அசல் வழக்கில் 1, 3 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர். 1ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை சங்கதியை காணும்

போது 3ம் பிரதிவாதி பெயரிலான 03.12.2008 தேதிய நன்கொடை ஆவணம் என தெரியாமல் அதில் கையொப்பம் செய்ததாகவும், ஆவணத்தில் சாட்சி கையொப்பம் இடவே தான் சென்றதாக கூறி வாதி வழக்கிற்கு ஆதரவாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். 3ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையை காணும் போது கிராம பொதுமக்கள் பொது பயன்பாட்டிற்காக தாவா சொத்து உட்பட இன்ன பிற சொத்துக்கள் அதன் உரிமையாளர் 3ம் பிரதிவாதி பெயரில் நன்கொடை ஆவணம் எழுதிக் கொடுத்து அவற்றில் பொது ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்து பணிகள் நடைபெற்று வரும் நிலையில் மூன்றாம் நபர்கள் தூண்டுதலின் பேரில் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளதாக எதிர்வாதிடப்பட்டுள்ளது.

**9)** அசல் வழக்கில் இரு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாதுரைகள் காணும் போது வாதி வழக்கிற்கு 1ம் பிரதிவாதி இசைந்து இணைந்து வழக்காடி உள்ளதும், 3ம் பிரதிவாதி மட்டும் எதிர்வழக்காடி வருவது நன்கு புலனாகிறது.

**10)** இம்மனுவினை மனுதாரர்/3ம் நபர் தரப்பில் தன்னை 2ம் வாதியாகவும், 5, 6 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 5, 6 பிரதிவாதிகளாக சேர்த்திட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பு அசல் வழக்கில் தன்னையும் 5, 6 எதிர்மனுதாரர்களை தரப்பினராக சேர்க்க காரணமாக மனுஅபிடவிட்டில் மனுதாரர் மற்றும் 5, 6 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி பொன்னழகு வாரிசுகள் என்றும், அசல் வழக்கு சொத்தில் 1ம் பிரதிவாதிக்குரிய 1/3 பாகத்தில் தனக்கும் 5, 6 எதிர்மனுதாரர்கள் 1/3 பாகம் உள்ளதால் தங்களைஇவ்வழக்கில் வழக்கு தரப்பினராக சேர்க்க வேண்டியுள்ளார்.

**11)** இம்மனுவினை மனுதாரர் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)ன் கீழ் தாக்கல் செய்துள்ளார். உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2) கூறுவது யாதெனில்,

**“Court may strike out or add parties – The Court may at any stage of the proceedings, either upon or without the application of either party, and on such terms as may appear to the court to be just, order that the name of any party improperly joined, whether as plaintiff or defendant, be struck out, and that the**

**name of any person who ought to have been joined, whether as plaintiff or defendant or whose presence before the Court may be necessary in order to enable the Court effectually and completely to adjudicate upon and settle all the questions involved in the suit, be added.”**

**12)** அசல் வழக்கில் வாதி தரப்பில் பாகப்பிரிவினை பரிகாரம் வேண்டியும் 3ம் பிரதிவாதி பேரில் 1, 2 பிரதிவாதிகள் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் ஏறபடுத்திய தாவா 03.12.2008 நன்கொடை பத்திரம் இல்லாநிலையது என விளம்புகை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது அறிய முடிகிறது. பாகப்பிரிவினை வழக்கில் பாகஸ்தர் அனைவரும் அவசியத் தரப்பினர் ஆவர். மனுதார் மற்றும் 5, 6 எதிர்மனுதாரர்கள், 1ம் பிரதிவாதி மூலம் உரிமை கோரும் பாகஸ்தர்கள் ஆவர். அசல் வழக்கில் வாதியின் பாகப்பிரிவினை பரிகாரத்திற்கு 1ம் பிரதிவாதி இசைவு தெரிவித்துள்ள நிலையில் தாவா சொத்தில் மனுதார் மற்றும் 5, 6 எதிர்மனுதார்கள், 1ம் பிரதிவாதி வழி உரிமைகோரும் நபர்கள் என்பதால் 1ம் பிரதிவாதி உயிருடன் உள்ள நிலையில் 1ம் பிரதிவாதியின் பாக உரிமை தீர்மானிக்கப்படாத நிலையில் தற்பொழுது வாதி தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினைக்கான அசல் வழக்கில் மனுதார் மற்றும் 5, 6 எதிர்மனுதாரர்கள் அவசியத் தரப்பினர்கள் அல்ல. எனவே மனு அனுமதிக்கதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அவ்வாறே மேற்படி கேள்விக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு, பின் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை.**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை.**